# <u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

***OS.No.62/2021*** ***Date: 10.03.2026***

***DW1* –** ராஜ்குமார்

<u>சாட்சி முன்னிலையானதின் பேரில் வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>

தாவா சொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எந்த கிராமத்தில், எந்த சர்வே எண்ணில் எவ்வளவு சொத்து பாகம் பிரிந்தது என்று நான் எதிர் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல. வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால், எனக்கு தெரியாது. வாதியின் வற்புறுத்தலால்தான் வா.சா.ஆ.3 ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட்டதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. எங்களுடைய சம்மதத்தின் பேரில்தான் வா.சா.ஆ.3 ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.3 ல் உள்ள சொத்து விபரம் சரியானதுதான். தாவா சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டு நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்றால், சரிதான். வா.சா.ஆ.3 கடனுக்காக எழுதிக் கொடுக்கப்பட்டதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. உள்ளூரில் அதுபோன்ற வழக்கம் இல்லையென்றால், சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீடு 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்று குறிப்பாக வா.சா.ஆ.3 ல் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். தாவா சொத்தை வாதி எங்களிடம் விலைக்கு கேட்கவில்லையென்றால், சரிதான். நாங்கள்தான் விற்பனை செய்வதாக வாதியை அணுகினோம் என்றால், சரியல்ல. வாதி லேவாதேவி தொழில் செய்வதில்லை என்றால், சரியல்ல. தாவா சொத்தை கிரையம் பெறும் எண்ணத்தில்தான் வா.சா.ஆ.3 ஏற்படுத்தப்பட்டது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.3 செல்லும் என்றாலும், அது எங்களை கட்டுப்படுத்தும் என்றாலும், சரியல்ல. வாதியை ஏமாற்றுவதற்காக கடனுக்காக எழுதிக் கொடுத்தோம் என்று பொய்யாக எதிர் வாதம் செய்கிறோம் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம்/- ராஜ்குமார்

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.